2022 ஏப்ரல் 7]

தாலுகாக்களில்கூட அரசு கட்டடங்கள் வெவ்வேறு இடங்களில் இருக்கின்றன. Collector Office*–ஐ எடுத்துக்கொண்டால், அதில்* integrated *ஆக* DRO *அலுவலகம்,* RDO *அலுவலகம் மற்றும்* ICDS *போன்ற* service*–ம் கிடைக்கின்ற மாதிரி இருக்கிறது. ஆனால்,* Panchayat level*–ல் போனால் ஊராட்சி* level*–ல் அலுவலகங்கள் விரிந்து ஆங்காங்கே பல்வேறு இடங்களில் இருக்கின்றன. அங்கு மக்களுக்கு ஒரே இடத்தில் சேவை கிடைப்பது கடினமாக இருக்கிறது. அதுவும் கொள்கை அடிப்படையில் முடிந்த அளவிற்கு எல்லா சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் கட்டுமானப் பணிக்கான செலவையும் குறைத்து, மக்களுக்கு கிடைக்கக்கூடிய சேவைகளை சுலபமாக கிடைக்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு* Finance Department*–ல் பொதுவாக ஒரு* guidance *கொடுத்திருக்கிறார். அந்த அடிப்படையில் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

நூலகங்களை நவீனப்படுத்துதல்

***9768—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருகம்பாக்கம் தொகுதியில் உள்ள நூலகங்களை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, தங்களது அனுமதியோடு விடையளிக்கிறேன். விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற நூலகங்கள் எல்லாம் நவீனமயமாக்கப்படுமா என்பது கேள்வி. ஆனால், ஏற்கெனவே அந்த தொகுதியில் இருக்கின்ற சாலிகிராமமாக இருந்தாலும் சரி,

கே.கே. நகர் ஆக இருந்தாலும் சரி, அதேபோன்று விருகம்பாக்கத்தில் இருக்கின்ற கிளை நூலகமாக இருந்தாலும் சரி, போதுமான இட வசதியோடு இருக்கின்றன. ஏற்கெனவே, அங்கே குழந்தைப் பிரிவு என்று தனியாக இருக்கின்றது. மகளிர் பிரிவு, கணினி பிரிவு, UPSC, TNPSC தேர்விற்குப் பயிற்சி எடுக்கின்ற ஒரு பிரிவு என்று தனியாக இருக்கின்றது. சொந்த நூல்களை எடுத்துக்கொண்டு வந்து படிப்பதற்கு இடவசதியும் அங்கே இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், கோடை காலத்தில் குழந்தைகளுக்குப் பயிற்சியும் தரப்படுகிறது. நூலக வார விழாவும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விருகம்பாக்கத்தில் இருக்கின்ற கிளை நூலகத்தில் நாளிதழ் பிரிவு, பருவ நாளிதழ் பிரிவு, கணினி பிரிவு மற்றும் இரவல் கொடுப்பதற்கான பிரிவும் தனியாக இருக்கின்றது. ஆக, அந்த நூலகம் போதுமான இடவசதியோடு சொந்த இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. தேவைப்படும் எனில், கருத்துரு பெறப்பட்டு, நவீனமயமாக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் கிளை நூலகங்கள் மூன்று இருக்கின்றன. குறிப்பாக, கலைஞர் கருணாநிதி நகரில் அமைந்துள்ள நூலகம், 1982–ல் துவங்கப்பட்ட நூலகம். அந்த நூலகக் கட்டடங்கள் சிதிலமடைந்திருக்கின்றன. அந்த நூலகத்தில் உள்ள மேசைகள், கதவுகள், புத்தக அறைகள் எல்லாம் பாழடைந்திருக்கின்றன. அந்த நூலகத்தின் சுற்றுச் சுவருக்குப் பின்பாக சென்னை குடிநீர் வாரியத்தின் இடம் இருக்கிறது. அங்கே செடிகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன என்றும், பாம்புகளும் இருக்கின்றன என்றும் பொதுமக்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்த நூலகத்தின் சுற்றுச் சுவரை நீளப்படுத்துமாறும், நவீன காலத்திற்கேற்ப நவீனப்படுத்தித் தருமாறும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்த மூன்று நூலகங்களில் சாலிகிராமம் நூலகம் 2,000* sq.ft. *இருக்கிறது; கே.கே. நகர் நூலகம் 1,800* sq.ft. *இருக்கிறது; விருகம்பாக்கம் நூலகம் 1,500* sq.ft. *இருக்கிறது. ஆகவே, போதுமான இடவசதியோடுதான் இருக்கின்றன. இருந்தாலும், அதைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் சில பிரச்சினைகள் இருப்பதாகவும், சில கட்டடங்கள் சிதிலமடைந்திருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார். கண்டிப்பாக இந்த வருடத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *ஏற்கெனவே நமது துறையின் சார்பாக பகுதிநேர நூலகமாக இருந்தாலும் சரி, ஊர்ப்புற நூலகமாக இருந்தாலும் சரி, முழுநேர கிளை நூலகமாக இருந்தாலும் சரி, மாவட்ட நூலகமாக இருந்தாலும் சரி, கிட்டத்தட்ட 4,650 நூலகங்கள் இருக்கின்றன. பல சட்டமன்ற உறுப்பினர்கள் நூலகங்களை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை மனுவாகக் கொடுத்திருக்கிறார்கள். கண்டிப்பாக இந்தக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு அவையெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, அங்கிருக்கின்ற நம்முடைய* Director of Public Libraries–*ஐ கலந்தாலோசித்து, உடனடியாக அவற்றைச் சரி செய்கின்ற பணிகளில் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் தொகுதியில் 2,93,250 வாக்காளர்கள் இருக்கிறார்கள். 6 வார்டுகள் இருக்கின்றன; 3 வார்டுகளில் கிளை நூலகங்கள் இருக்கின்றன. மேலும் உள்ள 3 வார்டுகளில் கிளை நூலகங்களும், 3 வார்டுகளில் இருக்கின்ற கிளை நூலகங்களில்*

குளிர் சாதன வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், கலைஞர் நகரில் இருக்கக்கூடிய நூலகத்தில் வாசகர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், அந்த நூலகத்தில் மேல் தளத்தை அமைத்துக் கொடுத்து, இன்னும் அதிகமான வாசகர்களை ஈர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். குறிப்பாக, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவும், முத்தமிழறிஞர் அவர்களும் “ஒரு நூலகம் திறக்கப்பட்டால், பல சிறைச்சாலைகள் மூடப்படும்” என்று தொடர்ந்து சொல்வார்கள். ஆகவே, எதிர்காலத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் நலனைக் கருதி, அந்த நூலகங்களை இன்னும் நவீனப்படுத்தித் தருமாறு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சாலிகிராமம் நூலகத்தில் கிட்டத்தட்ட 10,000 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதேபோன்று கே.கே. நகர் நூலகத்தில் 10,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். விருகம்பாக்கத்தில் மட்டும் 952 உறுப்பினர்கள்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனையும் நீங்கள் அதிகப்படுத்துங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாக இருந்தாலும் சரி, நம்முடைய இளைஞரணிச் செயலாளராக இருந்தாலும் சரி, நூல்களுக்கும், நூலகங்களுக்கும் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வழங்குவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். நீங்கள் அந்த இளைஞரணியில் ஓர் அமைப்பாளராக இருக்கின்றீர்கள். ஆக, விருகம்பாக்கத்தில் இருக்கின்ற நூலகத்திற்கு membership–ஐ நீங்கள் அதிகப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யும்போது, கண்டிப்பாக, நீங்கள் குறிப்பிட்ட நூலகங்களுக்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும், A.C. வசதி தேவையென்று கேட்டிருக்கிறீர்கள். அது எங்கெல்லாம் தேவைப்படுகின்றது என்பதை கலந்தாலோசித்து கண்டிப்பாக அதை நாங்கள் செய்து தருவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

2022 ஏப்ரல் 7]

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்ட மைய நூலகம் மிகவும் சிதிலமடைந்திருக்கிறது. கிளை நூலகங்களுக்கு அங்கிருந்துதான் நூல்கள் பிரித்து அனுப்பப்படுகின்றன. அதற்குரிய இடவசதி அங்கே இல்லை. எனவே, வாசகர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அந்தவகையில், அந்த நூலகத்தினுடைய கட்டடத்தைச் சீரமைத்துத் தரவேண்டும். அங்கு இட வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும். நாகூர் நூலகமும் மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது. அங்கே மழைக் காலத்தில் நூல்களெல்லாம் * சிதிலமடைந்துவிடுகின்றன. எனவே, அந்த நூலகக் கட்டடத்தையும் சீரமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுத்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 32 மாவட்ட மைய நூலகங்கள் இருக்கின்றன. மேலும், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் தலா 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, நூலகங்களைப் புதிதாகக் கட்ட இருக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் கேட்டதுபோல, அந்த நூலகங்களுக்கு, அங்கிருக்கின்ற C.E.O.s மற்றும் இங்கிருக்கின்ற Director of Public Libraries ஆகியோருடன் கலந்தாலோசித்து, எது எது தேவையோ, அவற்றிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று புத்தகங்களைப் பாதுகாத்து வைக்க வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையையும் சொல்லியிருக்கிறீர்கள். அதைக் கண்டிப்பாக நாங்கள் உள்வாங்கியிருக்கின்றோம். அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றித் தருவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

குழித்துறை, விளாத்துறை, மேல்புரம், இடைக்கோடு பகுதிகளில் நூலகங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் பழுதடைந்த கட்டடங்களாக இருக்கின்றன. சிலவற்றை நாங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சீரமைத்துக் கொடுத்திருக்கிறோம். Arch கேட்கிறார்கள். அதேபோல், நூலகத்தினுடைய 120 ஆண்டுகள் மற்றும் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடுவதற்கு நிதி கேட்கிறார்கள். முடிந்த அளவுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செய்து கொடுக்கிறோம். இருந்தாலும், அவற்றை முழுமையாகச் சீரமைக்க எங்களால் முடியவில்லை. ஆகையால், அவற்றை துறை ரீதியாகச் சீரமைத்து, digital நூலகமாக எல்லா நூலகங்களையும் மாற்றித் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் பிற நூலகர்கள் consolidated pay–ல் இருக்கிறார்கள். ஊர்ப்புற நூலகர்கள் 15, 20 ஆண்டுக் காலமாக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்தி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்லுங்கள்.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களை digital-மயமாக்கி, அவர்களை நிரந்தரப்படுத்தி அவர்கள் வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் கேட்கிறீர்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊர்ப்புற நூலகர் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட 1,612 பேர் அந்த மாதிரி இருக்கிறார்கள். கண்டிப்பாக, இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம். எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்ற

2022 ஏப்ரல் 7]

4,650 பேரில், அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். ஒரு பகுதியில் மக்கள்தொகை ஆயிரம் பேர் இருந்தாலே, ஊராட்சி மன்றத் தலைவர் அங்கிருக்கின்ற மக்களுடைய உதவியுடன் நூலகம் ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறது.

முற்பகல் 11–05

நூலகம் என்பது எவ்வளவு முக்கியம் என்பதை நன்கு அறிந்ததனால்தான் மே 7 அன்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மே 8 ஆம் தேதியே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்து எங்களுக்குக் கொடுத்த முதல் பணி என்னவென்றால், Anna Centenary Library*–க்குச் சென்று நீங்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்ற பணியைத்தான் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த அரசு,* Library*–ஐப் பொறுத்தவரைக்கும் அந்தளவுக்கு முக்கியத்துவம் தருகின்ற ஓர் அரசு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, சிதிலமடைந்திருக்கும் நூலகங்கள் எதுவாக இருந்தாலும், அதைப்போல 100 ஆண்டுகளைக் கடந்து செயல்படும் நூலகங்கள் எதுவாக இருந்தாலும், அவற்றினுடைய பெருமையைக் காக்கின்ற விதமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, கண்டிப்பாக அவற்றிற்கென தனி நிதி ஒதுக்கீடு செய்து, அவற்றிற்கான விழாவைக் கொண்டாடுகின்ற வகையில் இந்த அரசு கண்டிப்பாக ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள் பேசும்போது புத்தகங்கள் ** என்ற ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தையை நீக்கிவிட்டு, சிதிலமடைந்துள்ளன என அவைக்குறிப்பில் மாற்றம் செய்துகொள்ளவும்.*

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*